



**Rev. Fr. Stanley Sebastian**
Vicar - General
Archdiocese of Madras - Mylapore


02nd September 2023

As Vicar General of the Archdiocese of Madras-Mylapore I have been Vice Chair Person of Madras Social Service Society for past six years. In these, past two years I have been actively involved in some of the relief works of MSSS.

In India 29.5% of the total population are poor down trodden, most of them live in rural area. We have been helping them doing some relief work through the help of charitable and funding agencies from abroad. But, of late the present government has brought restriction and cancelled many FCRA (Foreign Contribution Relief Act). As a result no foreign funding agencies are ready to help MSSS to help the poor. Still, we cannot stop helping the poor people to find their livelihood. Hats off to the present **MSSS Director Cum Secretary Rev.Fr.M.V.Jacob** who has taken extra effort to find some Banks to come forward to give a long-term loan to the poor people, with meager interest to continue their agricultural work and to start small business to uphold their livelihood.

In ***Mk:14:7 Jesus said "The poor you will always have with you"*** As it is, for MSSS to continue this service to the poor, we cannot any more depend on the sources from outside. We appreciate the MSSS Directors/Secretary for his far sighted plane of creating new projects within to support MSSS to continue to help the poor and marginalized.

We thank God for the opportunity given to us to help the poor and needy and pray that He may bless all the people who are involved in helping the poor, marginalized and all humanity at large.

***Fr. A. Stanley Sebastian***
***Vicar General***


ARCHBISHOP'S HOUSE, # 41 Santhome High Road, Chennai - 600 004
Ph : 9962174645, (Per) olguidance@gmail.com
Tel : 044 - 24 64 11 02 / 24 64 08 33, email : archmsmlvicargeneral@gmail.com

# உள்ளே . . . . .


| பக்க எண். | |
|---|---|
| 1 | மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் பெண்கள் கூட்டமைப்பு |
| 1 | புத்தாக்க பயிற்சி |
| 2 | பயிற்சிகள் |
| 2 | கணணி பயிற்சி - ஙிறிளி |
| 2 | பொங்கல் விழா |
| 3 | மகளிர் தினவிழா - 2023 (11/03/2023) |
| 5 | மருத்துவ முகாம் |
| 7 | டெங்கு விழிப்புணர்வு - பேரணி |
| 8 | மாற்றுதிறனாளிகள் நல உதவி |
| 8 | மாலை நேரப்பள்ளி |
| 10 | நேரடிக் கடன் விவரம் - 09.02.2023 |
| 11 | வேலை வாய்ப்பு முகாம் |
| 11 | கோல்பிங் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் |
| 16 | அன்பிய மகளிர் சுயஉதவிக்குழுக்கள் |
| 16 | பீமன் தோப்பு - இயற்கை வேளாண்மை மாதிரி பண்ணை |
| 17 | குழந்தைகள் காப்பகம் |
| 17 | ஈரின் திட்டம் |
| 17 | டச்சு அகாடெமி |
| 18 | திறன் வளர்ப்பு பயிற்சி (வங்கிகளின் ஊக்கத்தொகை) |
| 18 | வலுவான கூட்டமைப்பு |
| 18 | சமூகபணி கள ஆய்வு |
| 19 | சமூகம் சார்ந்த வளர்ச்சி நிதி |
| 20 | புனித லூயிஸ் கல்வி உதவி |
| 21 | இருளர் இன குழந்தைகளுக்கு உதவி வழங்குதல் |
| 21 | ஏழைகளுக்கு உதவுதல் |
| 24 | குடும்ப பாதுகாப்பு திட்டம் - (ஷிகிதிறி) |
| 24 | சமூக பாதுகாப்பு திட்டம் |
| 24 | நிறைவாக |

# ஆண்டறிக்கை ஏப்ரல் 2022 - மார்ச் 2023

சென்னை சமூக சேவை சங்கம் "நீதியுள்ள சமுதாயம் படைப்பது" என்ற குறிக்கோளையும், வலுவிழந்தவர்களை வலுவுள்ளவர்களாக உருவாக்குவது என்ற நோக்கத்தையும் கொண்டு செயல்பட்டு வருகிறது. சுமார் 3250 சுய உதவி குழுக்கள் உருவாக்கப்பட்டு 48750 உறுப்பினர்களை கொண்டு கிராமம், பஞ்சாயத்து, ஒன்றியம், மாவட்டம் அளவிலான பெண்கள் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளது. அதோடு சமூக பொருளாதார இயற்கை வாழ்விட மேம்பாடு அடைய பெண்கள் அமைப்புகள் வழியாக சிறப்பாக செய்யப்பட்டு வருகிறது.

## 1 மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் பெண்கள் கூட்டமைப்பு

சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களை உள்ளடக்கிய பல கிராமங்களில் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் 3250 குழுக்கள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. ஒவ்வொரு தனி நபரும் தங்கள் வருவாயில் ஒரு பங்கை சேமிக்கவும் செலவினத்தை குறைக்கவும் கற்றுக் கொண்டுள்ளனர். பிறரிடம் கந்து வட்டி, கூட்டு வட்டி வாங்குவதை நிறுத்தி உள்ளனர். தேவையில் இருப்போர்க்கு சேமிப்பில் இருந்தும் வங்கியில் இருந்தும் கடன் பெற்றுக் கொள்கின்றனர்.

திருவள்ளூர் மற்றும் சென்னை மாவட்ட பெண்கள் கூட்டமைப்பிற்கு மூன்று வருடத்திற்கு ஒருமுறை நடைபெறும். மாவட்ட கூட்டமைப்பு பொறுப்பாளர்களை தேர்ந்தெடுக்கும் தேர்தல் 07.01.2023 அன்று சென்னை சமூக சேவை சங்க பயிற்சி மையத்தில் நடைபெற்றது. இதில் புதிய பெண்கள் கூட்டமைப்பு தலைமை பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்





1.திருமதி பராசக்தி மாவட்ட தலைவர்
2.திருமதி பிரேமா துணை.தலைவர்
3.திருமதி எஸ்தர் செயலாளர்
4.திருமதி செல்வி பொருளாலர்

## 2 புத்தாக்க பயிற்சி

மகளிர் சுயஉதவி குழுக்களை சார்ந்த பொறுப்பாளர்களுக்கு தலைமைத்துவத்தை எப்படி கையாளுவது, அரசு நலதிட்டங்களை பெறுவதற்கான வழிமுறைகள், அரசியல் பங்கேற்பு, குழுக்களை தன்னம்பிக்கையோடு வழி நடத்துவது, பொருளாதார முன்னேற்றத்திற்கான சிறு தொழில் செய்வது, வியாபார யுத்திகளை கையாளுவது, பதிவேடுகளை பராமரிப்பது இவை அனைத்தும் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 300 பொறுப்பாளர்களுக்கு கீழ்கண்ட தேதிகளில் புத்தாக்க பயிற்சிகள் நடத்தப்பட்டது.

| வ.எண் | தேதி | இடம் |
|---|---|---|
| 1 | 21.09.2022 | ஆவடி , வில்லிவாக்கம் |
| 2 | 29.09.2022 | மீஞ்சூர் |
| 3 | 30.09.2022 | பூண்டி |
| 4 | 18.10.2022 | கடம்பத்தூர் |
| 5 | 27.10.2022 | மாதர்பாக்கம் |



## 3 பயிற்சிகள்



புலம் பெயர்ந்த மகளிர்களுக்கான இந்த தையல் திறன் வளர்ப்பு இப்பயிற்சி 11. 05. 2022 துவங்கப்பட்டது. இப்பயிற்சி ஆவடி, வில்லிவாக்கம் பகுதியில் 3 மாதம் நடைப்பெற்றது. இதில் 80 பெண்கள் பயிற்சி பெற்றனர். இவர்களுக்கு 20.08.2022 அன்று சான்றிதழ் வழங்கப்பட்டது.

## 4 கணணி பயிற்சி - BPO

சமூக உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 25.04.2022 மீஞ்சூர், 29.04.2022 கடம்பத்தூர் பகுதிகளில் உள்ள இளம் பெண்களுக்கு வாழ்வாதாரத்தில் முன்னேற்றம் அடைவதற்கு 70 மகளிர்களுக்கு கணிணி பயிற்சிஅளிக்கப்பட்டு பயிற்சியின் முடிவில் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. பயிற்சி பெற்ற அனைவருக்கும் பல்வேறு நிறுவனங்கள் மூலம் வேலை வாய்ப்பு உத்தரவாதம் வழங்கப்பட்டது.



## 5 பொங்கல் விழா

ஒவ்வொரு ஆண்டும் தமிழர்களின் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் விதமாக பொங்கல் விழா நடத்தப்பட்டு வருகிறது. திருவள்ளூர் மற்றும் சென்னை மாவட்ட பெண்கள் கூட்டமைப்பு சார்பில் 19.01.2023 அன்று எல்லாபுரம் ஒன்றியத்தில் உள்ள பெரியபாளையம் புனித சூசையப்பர் பள்ளி வளாகத்தில் முதன்மை குரு பேரருட்தந்தை ஸ்டான்லி செபாஸ்டின் அவர்கள் முன்னிலையில் பொங்கல் வைத்து பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட 200 உறுப்பினர்களுக்கும் பொங்கல் பரிசு வழங்கப்பட்டது. கூடுதலாக மாற்றுத்திறனாளிகளுக்கு ரூபாய் 2000 பணமுடிப்புகள் வழங்கபட்டது.





## 6 மகளிர் தினவிழா - 2023 (11/03/2023)

சென்னை சமூக சேவை சங்கம், சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்ட பெண்கள் கூட்டமைப்பு இணைந்து "பாலின சமத்துவத்திற்கான புதுமையும் தொழில்நுட்பமும்" என்ற தலைப்பில் நடைபெற்ற மகளிர் தினவிழாவில் சென்னை மயிலை உயர்மறைமாவட்டத்தின் முதன்மை குருவும் சென்னை சமூக சேவை சங்கத்தின் துணை தலைவருமான பேரருட்தந்தை ஸ்டான்லி செபாஸ்டின் அவர்கள் முன்னிலை வகித்தார். மாண்புமிகு கிரிராஜன் MP தி.மு.க சட்ட திட்ட திருத்த குழு செயலாளர் அவர்கள் தலைமை ஏற்று சிறப்புரையாற்றினார். திருச்சி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு இனிகோ இருதயராஜ் MLA அவர்கள் பங்கேற்று நலதிட்ட உதவி வழங்கி சிறப்புரையாற்றினார். கலைமாமணி டாக்டர் சுதா அவர்கள் படைப்பிலும் பண்பாட்டிலும் பெண்கள் சமம் என்ற தலைப்பிலும், டாக்டர் அமுதலட்சுமி அவர்கள் கணிணி உலகில் பாலின சமத்துவத்திற்கான புதுயுகம் என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றினார்கள். அதனை தொடர்ந்து தமிழக அரசு மாநில திட்டக்குழு உறுப்பினர் முனைவர் சுல்தான் அகமது இஸ்மாயில் அவர்கள் பாலின சமத்துவத்திற்கான புதுமையும் தொழில்நுட்பமும் என்ற தலைப்பில் சிறப்பு கருத்துரையாற்றினார்.












1. 7 மாற்று திறனாளிகளுக்கு மூன்று சக்கர வண்டியும், ரூ.50,000/- காசோலையும்,
2. 10 கைம்பெண்களுக்கும் மற்றும் 10 திருநங்கைகளுக்கும் ஒரு மாதத்திற்கான சமையல் பொருட்களும், கேஸ் அடுப்பும்,
3. 8 நபர்களுக்கு வாழ்வாதாரத்திற்கான தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன.




பெண்கள் தினவிழாவிற்கு சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்ட கூட்டமைப்பு பொறுப்பாளர்கள், மகளிர் சுயஉதவிக்குழுக்கள், கோல்பிங்குழுக்களை சார்ந்த 3000 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள், சென்னை சமூக சேவை சங்க மையப்பணியாளர்கள், களப்பணியாளர்கள் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியை சென்னை சமூக சேவை சங்க இயக்குனரும் செயலருமான அருட்தந்தை **எம்.வி.ஜேக்கப்** அவர்கள் சிறப்பாக ஒருங்கிணைத்து வழி நடத்தினார்கள்.





## 7 மருத்துவ முகாம்

வில்லிவாக்கம், ஆவடி,கடம்பத்தூர், திருத்தணி, புழல், பழவேற்காடு, மீஞ்சூர் ஊத்துக்கோட்டை, எல்லாபுரம், பெரியபாளையம் போன்ற ஒன்றியங்களில் பொது மருத்துவ முகாம்களும் விழிப்புணர்வு பேரணிகளும் நடத்தப்பட்டது. இம் மருத்துவ முகாமில் சுமார் 4331 நபர்கள் கலந்து கொண்டனர் இதில் தீவிர நோயாளிகளாக 219 நபர்கள் கண்டறியப்பட்டனர். இவர்களுக்கு இலவச தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சென்னை சமூக சேவை சங்கம், முத்தூட் நிதி நிறுவனம் மற்றும் மாதா மெடிக்கல் கல்லூரி இணைந்து இலவச பொது மருத்துவ முகாம் 74 இடங்களில் நடத்தினர்.



| வ.எண் | தேதி | இடம் | பயனாளிகள் |
|---|---|---|---|
| 1 | 17.08.2022 | நந்தியம்பாக்கம் | 83 |
| 2 | 18.08.2022 | அம்பேத்கர் நகர் | 73 |
| 3 | 19.08.2022 | பொத்தூர் | 77 |
| 4 | 22.08.2022 | பல்லவாடா | 82 |
| 5 | 23.08.2022 | மாகரல் | 72 |
| 6 | 24.08.2022 | அகரம் | 78 |
| 7 | 25.08.2022 | பம்மது குளம் | 75 |
| 8 | 06.09.2022 | திருவெள்ளவாயல் | 78 |
| 9 | 07.09.2022 | பல்லவாடா | 71 |
| 10 | 08.09.2022 | வேலப்பாக்கம் | 64 |
| 11 | 09.09.2022 | காமராஜர் நகர் | 40 |
| 12 | 12.09.2022 | செஞ்சியம்மன்நகர் | 55 |
| 13 | 13.09.2022 | மேலப்பட்டு | 74 |
| 14 | 14.09.2022 | காரிதாஸ் நகர் | 51 |
| 15 | 06.10.2022 | பட்டமந்திரி | 70 |
| 16 | 07.10.2022 | புண்ணப்பாக்கம் | 65 |
| 17 | 10.10.2022 | எல்லம்மன்பேட்டை | 41 |
| 18 | 11.10.2022 | குமரன் நகர் | 60 |
| 19 | 12.10.2022 | தீயம்பாக்கம் | 60 |
| 20 | 13.10.2022 | தோக்கமூர் | 60 |
| 21 | 14.10.2022 | மாநெல்லூர் | 60 |
| 22 | 15.10.2022 | நந்தியம்பாக்கம் | 50 |
| 23 | 17.10.2022 | குளக்கரை | 64 |
| 24 | 14.11.2022 | நடுவூர் மாதாகுப்பம் | 105 |
| 25 | 15.11.2022 | நந்தியம்பாக்கம் | 76 |
| 26 | 16.11.2022 | திருவெள்ளவாயல் | 90 |
| 27 | 17.11.2022 | வெள்ளிவாயல்சாவடி | 106 |
| 28 | 19.11.2022 | தண்டுமா நகர் | 100 |
| 29 | 21.11.2022 | ஊத்துக்கோட்டை | 88 |
| 30 | 22.11.2022 | கூடுவாஞ்சேரி | 96 |
| 31 | 29.11.2022 | கண்ணம்பாக்கம் | 88 |
| 32 | 30.11.2022 | பூவாலை | 71 |

| வ.எண் | தேதி | இடம் | பயனாளிகள் |
|---|---|---|---|
| 33 | 26.12.2022 | பழவேற்காடு | 78 |
| 34 | 27.12.2022 | பள்ளிபுரம் | 71 |
| 35 | 28.12.2022 | செம்பேடு | 64 |
| 36 | 29.12.2022 | மாநெல்லூர் | 40 |
| 37 | 30.12.2022 | மாநெல்லூர் | 55 |
| 38 | 31.12.2022 | மீஞ்சூர் | 74 |
| 39 | 11.01.2023 | ஆண்டார்குப்பம் | 51 |
| 40 | 12.01.2023 | பெரியபாளையம் | 70 |
| 41 | 21.01.2023 | ஆண்டார்குப்பம் | 65 |
| 42 | 23.01.2023 | ஆண்டார்குப்பம் | 41 |
| 43 | 24.01.2023 | சோழவரம் | 60 |
| 44 | 25.01.2023 | மீஞ்சூர் | 60 |
| 45 | 27.01.2023 | மாநெல்லூர் | 60 |
| 46 | 28.01.2023 | மாநெல்லூர் | 61 |
| 47 | 29.01.2023 | பள்ளிபுரம் | 50 |
| 48 | 30.01.2023 | அகரம் | 64 |
| 49 | 09.02.2023 | இராமாபுரம் | 105 |
| 50 | 11.02.2023 | எடப்பாளையம் | 76 |
| 51 | 12.02.2023 | எடப்பாளையம் | 90 |
| 52 | 14.02.2023 | முகப்பேர் | 106 |
| 53 | 15.02.2023 | மாநெல்லூர் | 100 |
| 54 | 16.02.2023 | மாநெல்லூர் | 88 |
| 55 | 17.02.2023 | ஆண்டார்குப்பம் | 96 |
| 56 | 18.02.2023 | ஆண்டார்குப்பம் | 88 |
| 57 | 20.02.2023 | சோழவரம் | 71 |
| 58 | 21.02.2023 | பழவேற்காடு | 76 |
| 59 | 22.02.2023 | அகரம் | 90 |
| 60 | 23.02.2023 | மீஞ்சூர் | 106 |
| 61 | 28.02.2023 | மோரை | 100 |
| 62 | 16.03.2023 | சோழவரம் | 76 |
| 63 | 17.03.2023 | சோழவரம் | 90 |
| 64 | 18.03.2023 | ஆண்டார்குப்பம் | 74 |
| 65 | 19.03.2023 | மணலி புதுநகர் | 51 |
| 66 | 20.03.2023 | ஆண்டார்குப்பம் | 70 |
| 67 | 21.03.2023 | ஆண்டார்குப்பம் | 65 |
| 68 | 22.03.2023 | அகரம் | 41 |
| 69 | 23.03.2023 | பழவேற்காடு | 60 |
| 70 | 24.03.2023 | தேவதானம் | 60 |
| 71 | 25.03.2023 | இராமபுரம் | 60 |
| 72 | 26.03.2023 | புங்கம்பேடு | 64 |
| 73 | 27.03.2023 | நேமலூர் | 40 |
| 74 | 28.03.2023 | நந்தியம்பாக்கம் | 55 |
| | | **மொத்தம்** | **4555** |

## 8 டெங்கு விழிப்புணர்வு - பேரணி

திருத்தணி, கடம்பத்தூர், புழல், எல்லாபுரம், மீஞ்சூர், பழவேற்காடு, வில்லிவாக்கம், ஆவடி பகுதிகளில் டெங்கு விழிப்புணர்வு பேரணிகள் மற்றும் முகாம் 32 இடங்களில் நடத்தப்பட்டது. இதில் பொது மக்கள், மாணவ, மாணவிகள், 4369 நபர்கள் கலந்து கொண்டு விழிப்புணர்வு பெற்றனர். கும்மிடிபூண்டி, எல்லாபுரம், மாதர்பாக்கம் பகுதிகளில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பள்ளி வளாகத்தில் டெங்கு மற்றும் புற்றுநோய் விழிப்புணர்வு பயிற்சிகள் கீழ்கண்ட தேதிகளில் நடத்தப்பட்டது.



| வ.எண் | தேதி | இடம் | பயனாளிகள் |
|---|---|---|---|
| 1 | 30.09.2022 | நந்தியம்பாக்கம் | 90 |
| 2 | 12.10.2022 | செஞ்சியம்மன் நகர் | 45 |
| 3 | 13.10.2022 | ஜமீலாபாத் | 75 |
| 4 | 17.10.2022 | ஊத்துக்கோட்டை | 80 |
| 5 | 28.10.2022 | பூதூர் | 60 |
| 6 | 31.10.2022 | பாதிரிவேடு | 128 |
| 7 | 05.11.2022 | நந்தியம்பாக்கம் | 55 |
| 8 | 24.11.2022 | மாதர்பாக்கம் | 100 |
| 9 | 24.11.2022 | பல்லவாடா | 120 |
| 10 | 24.11.2022 | பழவேற்காடு | 75 |
| 11 | 25.11.2022 | அல்போன்சாபுரம் (கே.ஜி.கண்டிகை) | 61 |
| 12 | 25.11.2022 | தோக்கமூர் | 60 |
| 13 | 29.11.2022 | மாதவரம் (முஸ்லீம் நகர்) | 50 |
| 14 | 30.11.2022 | சாந்தோம் | 205 |
| 15 | 08.12.2022 | இருளர் காலனி பள்ளி | 60 |
| 16 | 08.12.2022 | வெள்ளிவாயல்சாவடி | 45 |
| 17 | 12.12.2022 | திருத்தணி பள்ளி வளாகம் | 100 |
| 18 | 22.12.2022 | பழவேற்காடு | 80 |
| 19 | 09.01.2023 | ஆரம்ப பள்ளி தோக்கமூர் | 60 |
| 20 | 12.01.2023 | செதில்பாக்கம் | 30 |
| 21 | 14.01.2023 | மாதர்பாக்கம் | 100 |
| 22 | 20.01.2023 | கும்மிடிபூண்டி | 50 |
| 23 | 20.01.2023 | ஆரம்பாக்கம் | 100 |
| 24 | 23.01.2023 | கன்னியம்மன்பேட்டை | 50 |
| 25 | 24.01.2023 | காந்திநகர் | 60 |
| 26 | 27.01.2023 | கண்ணன் கோட்டை | 50 |
| 27 | 27.01.2023 | நேமலூர் | 60 |
| 28 | 31.01.2023 | வெள்ளிவாயல்சாவடி | 62 |
| 29 | 04.02.2023 | மாநெல்லூர் | 60 |
| 30 | 04.02.2023 | சகாயமாதா அரசினர் மகளிர் பள்ளி | 80 |
| 31 | 07.02.2023 | வெள்ளிவாயல்சாவடி | 70 |

## ௯ மாற்றுதிறனாளிகள் நல உதவி

மீஞ்சூர் ஒன்றியம் கூனாங்குப்பம், லைட்ஹவுஸ் பஞ்சாயத்தில் உள்ள இராஜேந்திரன், கிள்ளியம்மாள் ஆகியோருக்கு திருவள்ளூர் மாவட்ட மாற்று திறனாளிகள் நல மையத்திலிருந்து 19.04.2022 அன்று காது கேட்கும் கருவிகள் கிடைப்பதற்கு வழிவகை செய்தனர். 17.08.2022 அன்று 5 மாற்றுதிறனாளிகளுக்கு அடையாள அட்டைகளை பொன்னேரி அரசு மருத்துவமனையிலிருந்து பெற்று தரப்பட்டது. 26.08.2022 அன்று பெரியமாங்காடு பகுதியை சேர்ந்த கால் ஊனமுற்ற தேசிங்கு என்பவருக்கு அரசிடம் இருந்து ஊன்று கோல்களை பழவேற்காடு பகுதியில் உலக மாற்றுதிறனாளிகள் தினம் 09.01.2023 அன்று கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் ரூ.2,00,000/- மதிப்பிலான வீல் சேர், சைக்கிள், ஊன்றுகோல் உள்ளிட்ட உபகரணங்களை வழங்கினார்கள். மேலும் இந்நிகழ்வில் 100 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.10,00,000/- பத்து இலட்சம் மதிப்பிலான நலதிட்ட உதவிகளும், ஊக்கத்தொகையும் இயக்குநர் தந்தை அவர்களால் வழங்கப்பட்டது.இந்நிகழ்வு சென்னை சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் அருட்தந்தை எம்.வி.ஜேக்கப் அவர்கள் தலைமையில் மாற்றுத்திறனாளிகள் சுமார் 400-க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் மீஞ்சூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் ழு.ரவி பங்கேற்றனர்.




## 10 மாலை நேரப்பள்ளி

மாலைநேர பள்ளிகள் நமது மறைமாவட்டத்தில் பல பங்குகளிலும் மகளிர் சுயஉதவிக்குழு இயங்கி வருகின்ற பகுதிகளிலும் நடத்தப்பட்டு வருகின்றது. இங்கு கல்வி பயிலும் மாணவ மாணவியர்கள், படிக்கும் பள்ளியில் தன்னம்பிக்கையின்றி இருப்பவர்கள் கூச்ச சுபாவம் கொண்டவர்கள் இவர்களை அடையாளம் கண்டு இம்மனநிலையில் இருந்து விடுபட வைப்பது. சுற்றுசூழல் சுத்தமாக வைத்துக்கொள்ள விழிப்புணர்வு கொடுத்தல். இதனால் அவர்களிடம் உற்சாகமும் ஈடுபாடும் அதிகரித்துள்ளது. இடைநில்லா பிள்ளைகள் இல்லை என்கின்ற நிலை உருவாகியுள்ளது. பள்ளியில் நடத்தும் பாடத்தில் புரியாமல் இருந்தால் அவர்கள் மாலைநேர வகுப்பில் நிவர்த்தி செய்து கொள்கின்றனர். தங்களின் கடமைகள் பணிகள் என்ன என்பதையும் அவர்களுக்கு தெரிந்து கொள்ள ஊக்கப்படுத்துகின்றனர்.

மாதிரி கையேடு மற்றும் ஆண்டு செயல்திட்டங்கள் அனைத்தும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களோடு இணைந்து உருவாக்கப்படுகின்றது. ஏழை குழந்தைகள் தங்கள் தினசரி நாட்களில் சுகாதாரம் இன்றி இருந்தனர். இவர்களை பார்த்து மற்றவர்கள் ஏளனமாக பேசுவது, பார்ப்பது, தரம் குறைவாக நடத்துவது போன்ற வருந்ததக்க செயல்கள் இருந்தது. ஆனால் தற்போது இந்த நிலை மாறி இந்த பிள்ளைகளும் மற்றவர்களைப்போல் நாகரிகமாகவும் இருக்க கற்றுக்கொண்டனர். மற்றவர்கள் மதிக்கும் விதமாக இருக்கின்றனர். இவை அனைத்தும் இந்த மாலைநேர வகுப்புகளில் உருவான விளைவுகள்.

03.04.2022 அன்று நந்தியம்பாக்கம், கும்மிடிபூண்டி பகுதிகளில் உள்ள மாலை நேர வகுப்புகளில் பயிலும் மாணாக்கர்கள் பழவேற்காட்டில் உள்ள மாலை நேர வகுப்பு மாணாக்கர்களை சந்தித்து தங்களின் அனுபவ பகிர்வுகளையும் அந்த மாணவர்களின் நடப்பு அனுபவங்களையும் கலந்துரையாடி மகிழ்ந்தனர்.






14 ஒன்றியங்களில் (parishes) உள்ள வாழ்வாதாரத்தில் மிகவும் பின்தங்கி வாழும் ஏழை மாணவர்களுக்கு 80 மையங்கள் வழியாக அவர்களுக்கு இலவச மாலைநேர கல்வி வழங்கப்படுகிறது.

| வ.எ | மையம் | ஆண் | பெண் | மொத்தம் | வ.எ | மையம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கனகமாசத்திரம் | 58 | 68 | 126 | 41 | தொழுதாவூர் | 54 | 42 | 96 |
| 2 | பாகல்மேடு | 107 | 127 | 234 | 42 | குன்றத்தூர் | 18 | 22 | 40 |
| 3 | மேல்மா நகர் | 74 | 46 | 120 | 43 | சின்னம்மாபேட்டை | 21 | 32 | 53 |
| 4 | Dr அம்பேத்கர்நகர் | 24 | 27 | 51 | 44 | சைதாப்பேட்டை | 23 | 24 | 47 |
| 5 | ஆர்.ஆர். நகர் | 32 | 38 | 70 | 45 | திடீர்நகர் சைதாப்பேட்டை | 24 | 27 | 51 |
| 6 | தெக்களூர் | 26 | 24 | 50 | 46 | ரங்கராஜபுரம் | 32 | 38 | 70 |
| 7 | பெருகுமி | 36 | 24 | 60 | 47 | வசந்தம் நகர் பூண்டி | 26 | 24 | 50 |
| 8 | கல்லுகடை மேடு | 24 | 31 | 55 | 48 | பண்ணூர் | 46 | 22 | 68 |
| 9 | சிங்கராஜபுரம் | 19 | 39 | 58 | 49 | செஞ்சியம்பாக்கம் | 25 | 32 | 87 |
| 10 | முருக்கம்பட்டு | 14 | 17 | 31 | 50 | காசிமேடு | 12 | 24 | 36 |
| 11 | மேல் திருத்தணி | 18 | 24 | 42 | 51 | திருத்தணி | 12 | 18 | 30 |
| 12 | மாநெல்லூர் | 46 | 58 | 104 | 52 | அந்தோணியார்புரம் | 18 | 12 | 30 |
| 13 | பல்லவாடா | 49 | 31 | 80 | 53 | கண்ணூர் | 22 | 21 | 43 |
| 14 | கோங்கல்மேடு | 60 | 79 | 139 | 54 | ஜோதிமா நகர் | 19 | 26 | 45 |
| 15 | விடையூர் | 127 | 120 | 247 | 55 | வியாசர்பாடி | 25 | 20 | 45 |
| 16 | மாதவரம் | 72 | 70 | 142 | 56 | வியாசர்பாடி | 54 | 42 | 96 |
| 17 | மணலி புது நகர் | 54 | 42 | 96 | 57 | நூம்பல் (பூந்தமல்லி) | 21 | 32 | 53 |
| 18 | தீயம்பாக்கம் | 21 | 32 | 53 | 58 | திடீர் நகர் (சைதாப்பேட்டை) | 23 | 24 | 47 |
| 19 | காமராஜபுரம் | 23 | 24 | 47 | 59 | அரும்பாக்கம் | 14 | 23 | 37 |
| 20 | எண்ணூர் | 14 | 23 | 37 | 60 | தெக்களூர் | 24 | 25 | 49 |
| 21 | வெள்ளிவாயல்சாவடி | 24 | 25 | 49 | 61 | நொச்சிலி | 18 | 23 | 41 |

| வ.எ | மையம் | ஆண் | பெண் | மொத்தம் | வ.எ | மையம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22 | ராஜரத்தினம்நகர் | 18 | 23 | 41 | 62 | அத்திப்பட்டு | 20 | 24 | 44 |
| 23 | கள்ளூகடைமேடு | 20 | 24 | 44 | 63 | மணவூர் | 22 | 18 | 40 |
| 24 | நந்தியம்பாக்கம் | 22 | 18 | 40 | 64 | திருவாலங்காடு | 14 | 22 | 36 |
| 25 | அத்திப்பட்டு | 14 | 22 | 36 | 65 | பம்மது குளம் | 54 | 42 | 96 |
| 26 | அம்பேத்கர்நகர் | 10 | 29 | 39 | 66 | பூதூர் | 18 | 22 | 40 |
| 27 | வில்லிவாக்கம் | 26 | 19 | 45 | 67 | தோக்கமூர் | 21 | 32 | 53 |
| 28 | காசிமேடு | 30 | 18 | 48 | 68 | கோங்கல்மேடு | 23 | 24 | 47 |
| 29 | காசிமேடு | 18 | 25 | 43 | 69 | செல்லியம்மன் நகர் | 24 | 27 | 51 |
| 30 | கடம்பத்தூர் | 26 | 21 | 47 | 70 | சீனி குப்பம் | 32 | 38 | 70 |
| 31 | எம்ஜிஆர் நகர் | 22 | 29 | 51 | 71 | பழைய வெண்மனபுதூர் | 26 | 24 | 50 |
| 32 | திருவாலங்காடு | 32 | 38 | 70 | 72 | தூசைபுரம் | 46 | 22 | 68 |
| 33 | குப்பம் கண்டிகை | 26 | 24 | 50 | 73 | ஏகாட்டூர் | 25 | 32 | 57 |
| 34 | ஆவடி | 36 | 24 | 60 | 74 | பொத்தூர் | 25 | 32 | 57 |
| 35 | சத்தியமூர்த்திநகர் | 24 | 31 | 55 | 75 | பார்க் டவுன் | 12 | 24 | 36 |
| 36 | அடையாளம்பட்டு | 19 | 39 | 58 | 76 | வைசாலி நகர் | 21 | 32 | 53 |
| 37 | அந்தோணியார்புரம் | 14 | 17 | 31 | 77 | இருளர் காலனி | 23 | 24 | 47 |
| 38 | தூசைபுரம் | 18 | 24 | 42 | 78 | காட்டூர் | 12 | 18 | 30 |
| 39 | பண்ணூர் | 46 | 48 | 94 | 79 | K.G.கண்டிகை | 27 | 18 | 45 |
| 40 | தண்டுமா நகர் | 72 | 70 | 142 | 80 | பெரியபாளையம் | 16 | 21 | 37 |
| | | | | | | **மொத்தம்** | **2407** | **2561** | **4998** |

## 11 நேரடிக் கடன் விவரம் - 09.02.2023

வாழ்வாதாரத்தை பெருக்குவதற்கும், புதிய தொழிலை தொடங்குவதற்கும் மற்றும் ஏற்கனவே செய்து வருகின்ற தொழிலை விரிவுபடுத்துவதற்கும் வங்கிகளிலிருந்து நேரடி கடன் சுய உதவி குழுக்கள் பெறுகின்றனர். குறிப்பாக எல்லாபுரம், பெரியபாளையம், ஊத்துக்கோட்டை பகுதியில் செயல்பட்டு வரும் 63 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூபாய் ஒன்பது கோடி (ரூ.9,00,00,000/-)கடனுதவியாக **Bank of Baroda** வங்கி மூலம் 09.02.2023 வழங்கப்பட்டது. மேலும் **NABFINS, IOB, Indian Bank, Canara Bank, ICICI** வங்கிகள் மூலம் 280 குழுக்களுக்கு ரூபாய் பதினெட்டு கோடியே எழுபது லட்சம் (ரூ.18,70,00,000/-)கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

சென்னை சமூக சேவை சங்கத்தின் வாழ்வாதார நிதி உதவி திட்டத்தின் மூலம் 12 ஒன்றியங்களில் உள்ள மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு வாழ்வாதாரத்திற்கான கடன் உதவியாக ரூபாய் இரண்டு கோடியே இரண்டு இலட்சம் (ரூ.2,02,00,000/-) வழங்கப்பட்டது.





## 12 வேலை வாய்ப்பு முகாம்

30.04.2022 திருவொற்றியூர் புனித பவுல் பள்ளி வளாகத்திலும், 13.08.2022 சின்னமலை புனித சேவியர் பள்ளி வளாகத்திலும் மாபெரும் வேலை வாய்ப்பு முகாம் சென்னை சமூக சேவை சங்கம் மற்றும் மேஜிக் பஸ் இணைந்து நடத்தியது. இந்த வேலை வாய்ப்பு முகாமில் 50-க்கும் மேற்பட்ட கம்பெனிகள் பங்கேற்றன. மொத்த பங்கேற்பாளர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்டவர்கள் 1350 நபர்கள் இவர்களில் அதிகமானோர் 18 முதல் 40 வயதிற்குள் இருக்கும் இளையோர்கள் இவர்கள் வேலையின்றி உள்ள இச்சூழலில் இவ்வேலை வாய்ப்பு முகாம் பெரும் உதவியாக இருந்தது. இம்முகாமில் 852 நபர்கள் நிகழ்விடத்திலேயே தேர்வாகி பயனடைந்துள்ளனர்.




## 13 கோல்பிங் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள்

கோல்பிங் குழுக்களின் செயல்பாடுகள் சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் 17.03.2023 அன்று 58 பங்குதளங்களில் 91 கோல்பிங் குழுகளில் 1286 உறுப்பினர்கள் இணைந்து ஆன்மீகம், பொருளாதாரம் மற்றும் சமூகசேவை செயல்பாடுகளை உள்ளடக்கி செய்யப்பட்டு வருகின்றனர். நகர்புற மற்றும் கிராமபுறங்களில் சிறு தொழில் செய்து வருவாய் ஈட்டி தன்னுடைய குடும்ப பொருளாதாரத்தை மேம்படுத்தி வருகின்றனர். இதனால் தங்களுடைய குடும்பத்தில் மகிழ்ச்சி காண முடிகிறது.

பொருளாதார செயல்பாடுகள் /பங்குகளில் ஏழ்மையில் உள்ள குடும்பங்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு உணவு பொருட்கள் மற்றும் நிதி உதவி செய்து வருகின்றார்கள்.

1. ஏழை மாணவர்களை தத்தெடுத்து அவர்களுக்கு கல்வி பயில உதவி வருகின்றனர்,
2. வீடுகளை பழுது பார்பதற்கு உதவுவது
3. தனி நபர் சிறு தொழில் செய்வதற்கும், செய்யும் தொழிலை மேலும் விரிவு படுத்துவதற்கும் உதவுகின்றனர்
4. சேமிப்பில் இருந்து சுழற்சி முறையில் கடன் உதவி செய்து தருகின்றனர்
5. அரசு வங்கிகளில் நேரடி கடன் பெற்று பல வகையான தொழில்கள் செய்து வருகின்றனர்.
6. சமூக பாதுகாப்பு திட்டத்தில் தங்களை இணைத்து கொண்டுள்ளனர். கோல்பிங் குடும்பங்களை சார்ந்த அனைத்து உறுப்பினர்களும் இணைந்துள்ளனர் என்பது குறிப்பிடதக்கது.



### வருவாய் பெருக்கு திட்டம் / IIGP

கோல்பிங் உறுப்பினர்களின் தனி நபர்கள் சிறு தொழில் செய்து வருவாய் பெருக்கி தங்களது குடும்ப பொருளாதார நிலையை மேம்படுத்தி வருவதற்காக இந்த திட்டம் அளிக்கப்படுகிறது. 1.மாடு வளர்ப்பு, 2.ஆடு வளர்ப்பு, 3.பெட்டிகடை, 4.ஊறுகாய் தயாரிப்பு, 5.தையல் கடை, 6.பூ வியாபாரம், 7.அழகு சாதன பொருட்கள், 8.பல்பொருள் அங்காடி, 9. பால் வியாபாரம், 10. பழசாறு கடை, 11.அடுமனை, 12.எழுது பொருள் கடை, 13.மளிகை கடை, 14.அழகு கலை நிலையம், 15.மீன் வியாபாரம்.

### கூட்டு வருவாய் பெருக்கு திட்டம் (CIGP)

கூட்டாக தொழில் செய்வதற்கும் வருமானம் ஈட்டுகின்ற தொழிலையும், இடத்தையும் தேர்வு செய்து வாடிக்கையாளர்களுக்கு மொத்தமாகவும் அல்லது சில்லரையாகவும் விற்பனை செய்து நிரந்தர வருவாய் பெருக்குவதற்கான பயிற்சிகள் கொடுக்கப்பட்டு இப்பயிற்சியின் வாயிலாக கூட்டு தொழிலை செய்வதற்கு முன் வருகின்ற குழுக்களை தேர்வு செய்து இந்த கூட்டு வருவாய் பெருக்கு திட்டத்திற்கு உதவி செய்யப்படுகின்றது.

### கறவை மாடு வளர்ப்பு திட்டம் / MAP

இன்றைய சமூக கால மாற்றங்களில் பால் மற்றும் பால் பொருள்கள் இன்றியமையாத ஒன்று இதனை மெய்ப்பிக்கும் வகையில் கறவை மாடு வளர்ப்பு கோல்பிங் அங்கத்தினர்களுக்கு ஒரு வரபிரசாதம். இதனை வளர்ப்பதற்கும் பராமரிப்பதற்கும் கால்நடை வளர்ப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டு அதன் அடிப்படையில் விருப்பம் மற்றும் அதற்கான வாய்ப்புகள் உள்ள அங்கத்தினர்களுக்கு இத்திட்டம் அளிக்கப்படுகிறது.



### தொழில் கல்வி பயிற்சி திட்டம் / VTP

வறுமை கோட்டில் உள்ள ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்களை சார்ந்த பெரும்பாலான மாணவ மாணவியர் 10,12-ம் வகுப்பிற்கு மேல் உயர்கல்வி பயில வாய்ப்பு உருவக்கப்படவில்லை இத்தகையவர்களுக்கு தொழில் ரீதியாக பயிற்சி பெற்று அவர்கள் சொந்தமாக தொழில் தொடங்குவதற்கும் தொழில்நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெறுவதற்கும் பெறும் உதவியாக இருக்கின்றது.



## வீடு கட்டும் திட்டம் /HSP

மனிதன் வாழ்வதற்க்கு வீடு அவசியமாகின்றது. மழை வெள்ளம், தீ போன்ற இயற்கை சீற்ற காலங்களில் குடும்பங்களை பாதுகாப்பதற்கு நல்ல வீடு அவசியம். ஏழை எளியவர்கள் ஓலை வீடுகள் மற்றும் பழமையான வீடுகளில் இருந்து விடுபட்டு நல்ல காங்கிரீட், அல்லது ஓடு வீடு அமைத்துக் கொள்ளவும் சமூகத்தில் மாற்றம் மற்றும் அந்தஸ்து உயரவும் இத்திட்டம் கைகொடுக்கின்றது.



## கழிவறை கட்டும் திட்டம் /SAP

உடல் நலத்திற்கு சுகாதாரம் மிக அவசியம். நகர மயமாதல், மக்கள் தொகை பெருக்கம் இவற்றையெல்லாம் எதிர் கொள்வதற்கு தனி நபர் கழிவறை மிக அவசியமாகிறது. சுகாதாரம், தூய்மை என்று வெறும் வார்த்தையால் அல்ல செயல் வடிவத்தில் அமைய வேண்டும் என்ற சிந்தனையோடு கழிவறை கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு கிராமப் பகுதிகளிலும் இவைகளில் மாற்றம் ஏற்பட வேண்டும் இதனால் இயற்கை உபாதைகள், மனிதர்களின் மறைமுக தொல்லை, பெண்கள் பாதுகாப்பு இவைகளை கருத்தில் கொண்டு ஒவ்வொரு ஆண்டுதோறும் குறைந்தது 20 முதல் 40 குடும்பங்கள் வரை சுகாதாரமான கழிவறை கட்ட உதவி வருகின்றது.



## பயிற்சிகள்

கோல்பிங் குழுக்கள் பல பங்குகளில் செயல்பட்டு வருகின்றது. அவற்றில் குறிப்பாக 7 கிராமங்களை தேர்வு செய்து அவர்களுக்கு தலைமை பண்பு, குழுக்களை வழிநடத்துதல், பிரச்சனைகளை கையாளுதல், அரசு மற்றும் பிறநிறுவனங்களுடன், வங்கிகள் இவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது சுற்றுபுற சுகாதாரம் மற்றும் இயற்கை வளங்களை பாதுகாப்பது, குறுங்காடு வளர்த்தல் இந்த தலைப்பின் கீழ் VLKF, VDC, CLKF, DLKF கோல்பிங் உறுப்பினர்கள் பொறுப்பாளர்கள் இவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டது.



| வ.எ | தேதி | இடம் | பயிற்சி | பங்கேற்றவர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 21.04.2022 | கடம்பத்தூர் | 1.05 கோல்பிங் உறுப்பினர்களுக்கான சமூக வனவியல் திறன் வளர்ப்பு பயிற்சி | 30 |
| 2 | 24.04.2022 | ஆவடி | 1.05 கோல்பிங் உறுப்பினர்களுக்கான சமூக வனவியல் திறன் வளர்ப்பு பயிற்சி | 30 |
| 3 | 25.04.2022 | காந்திபேட்டை | 1.02a உறுப்பினர்களுக்கான வலை பின்னலுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி | 30 |
| 4 | 26.04.2022 | மாதர்பாக்கம் | 1.02a உறுப்பினர்களுக்கான வலை பின்னலுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி | 30 |
| 5 | 06.07.2022 | கடம்பத்தூர் | 2.01 சாத்தியமான தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி | 30 |
| 6 | 13.07.2022 | ஆவடி | 2.01 சாத்தியமான தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி | 30 |
| 7 | 14.07.2022 | G.K.M.காலனி | 2.01c சாத்தியமான தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்ட அறிக்கை தயாரிப்புக்கான பயிற்சி | 30 |
| 8 | 19.07.2022 | கடம்பத்தூர் | 2.02 கூட்டு வருமான பெருக்கு திட்டத்தின் திறன் பயிற்சி | 10 |
| 9 | 22.07.2022 | ஆவடி | 2.02 கூட்டு வருமான பெருக்கு திட்டத்தின் திறன் பயிற்சி | 10 |
| 10 | 04.08.2022 | கண்ணூர் | 3.03 உறுப்பினர்களுக்கான இணைப்பு மற்றும் பரப்புரை உரிமை சார்ந்த பயிற்சி | 30 |
| 11 | 08.08.2022 | தி.நகர் | 2.03 அரசாங்கம் மற்றும் வங்கியுடன் தொடர்பு குறித்த பயிற்சி | 25 |
| 12 | 25.08.2022 | காந்திபேட்டை | 3.07 பொது இடங்களை சுத்தப்படுத்துதல், சுற்றுபுற தூய்மைக்கான விழிப்புணர்வு பயிற்சி | 62 |
| 13 | 27.08.2022 | திருவாலங்காடு | 3.07 பொது இடங்களை சுத்தப்படுத்துதல், சுற்றுபுற தூய்மைக்கான விழிப்புணர்வு பயிற்சி | 48 |
| 14 | 27.09.2022 | நெசப்பாக்கம் | 1.02a உறுப்பினர்களுக்கான வலை பின்னலுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி | 25 |
| 15 | 28.09.2022 | T.G அண்ணாநகர் | 1.02a உறுப்பினர்களுக்கான வலை பின்னலுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி | 25 |
| 16 | 29.09.2022 | கடம்பத்தூர் | 1.02a உறுப்பினர்களுக்கான வலை பின்னலுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி | 25 |
| 17 | 29.10.2022 | பீமன்தோப்பு | 1.05 கோல்பிங் உறுப்பினர்களுக்கான சமூக வனவியல் திறன் வளர்ப்பு பயிற்சி | 26 |
| 18 | 08.11.2022 | வளசரவாக்கம் | 2.02 கூட்டு வருமான பெருக்கு திட்டத்தின் திறன் பயிற்சி | 25 |
| 19 | 09.11.2022 | மடுமா நகர் | 2.02 கூட்டு வருமான பெருக்கு திட்டத்தின் திறன் பயிற்சி | 25 |
| 20 | 10.11.2022 | கடம்பத்தூர் | 2.01c சாத்தியமான தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்ட அறிக்கை தயாரிப்புக்கான பயிற்சி | 25 |
| 21 | 18.11.2022 | அக்கரைகுப்பம் | 3.05 பிரதிநிதிகளுக்கு பங்கேற்பு மேலாண்மை மற்றும் மதிப்பீடு பற்றிய பயிற்சி | 25 |
| 22 | 21.11.2022 | தூரூண்டி | 3.07 பொது இடங்களை சுத்தப்படுத்துதல், சுற்றுபுற தூய்மைக்கான விழிப்புணர்வு மற்றும் முன்னெடுப்பு பயிற்சி | 50 |
| 23 | 30.11.2022 | ஆவடி | 2.01b அடிப்படை தொழில் முனைவோருக்கான மேம்பாட்டு பயிற்சி | 25 |
| | | | **மொத்தம்** | **671** |

## கோல்பிங் உறுப்பினர்கள் இறப்பு நிவாரண நிதி

கோல்பிங் உறுப்பினர்கள் அனைவரும் ஆண்டு தோறும் தேசிய அலுவலகத்திற்கு சந்தா செலுத்தி வருகின்றனர். அதில் ஒரு சிறு தொகையை உறுப்பினர்களின் பாதுகாப்பிற்காக ஒதுக்கி வைக்கப்படுகின்றது. இந்நிதியானது உறுப்பினர்கள் இறப்பு எய்தினாலோ அல்லது இயற்கை பேரிடரால் கோல்பிங் குடும்பங்கள் பாதிக்கப்படும் போது இந்நிதியிலிருந்து தேசிய அலுவலகத்தால் உதவி வழங்கப்பட்டு வருகிறது.

| வ.எ | இடம் | வங்கி | தொகை |
|---|---|---|---|
| 1 | மேத்தா நகர் கோல்பிங் குழு | இந்தியன் வங்கி | 12,00,000 |
| 2 | மேத்தா நகர் புனித பவுல் கோல்பிங்குழு | இந்தியன் வங்கி | 14,00,000 |
| 3 | மேத்தா நகர் குழந்தை யேசு கோல்பிங்குழு | இந்தியன் வங்கி | 14,00,000 |
| 4 | மேத்தா நகர் புனித வின்சென்டியர் கோல்பிங்குழு | இந்தியன் வங்கி | 14,00,000 |
| 5 | சீனிவாச நகர் மத்தேயு கோல்பிங்குழு | இந்தியன் வங்கி | 15,00,000 |
| 6 | காசிமேடு கோல்பிங்குழு 2 | இந்தியன் வங்கி | 7,00,000 |
| 7 | காந்திநகர் சவேரியார் கோல்பிங்குழு | இந்தியன் வங்கி | 8,00,000 |
| 8 | நெசப்பாக்கம் ஆரோக்கிய அன்னை கோல்பிங்குழு | இந்தியன் வங்கி | 5,00,000 |
| 9 | கொரட்டூர் உதவும் கரங்கள் கோல்பிங்குழு | இந்தியன் வங்கி | 8,50,000 |
| 10 | லட்சுமிபுரம் லீலிமலர் கோல்பிங்குழு | இந்தியன் வங்கி | 9,00,000 |
| 11 | ஆவடி திருவள்ளூர் நகர் கோல்பிங்குழு | இந்தியன் வங்கி | 9,90,000 |
| 12 | நெசப்பாக்கம் அந்தோணியார் கோல்பிங்குழு | இந்தியன் வங்கி | 3,00,000 |
| | **மொத்தம்** | | **1,19,40,000** |




மேற்கண்ட குழுக்கள் அனைத்தும் இந்தியன் வங்கியில் நேரடி கடன் பெற்று தங்களின் திறனுக்கு ஏற்ப சிறு தொழில் செய்து அதில் கிடைக்கும் வருமானத்தில் மாதம் தவறாமல் கடன் திருப்பம் செய்வது மீதி தொகையை தங்களின் வாழ்வாதாரத்திற்கான தேவையை பூர்த்தி செய்து கொள்கின்றனர்.

## 14 அன்பிய மகளிர் சுயஉதவிக்குழுக்கள்

சென்னை மயிலை உயர்மறைமாவட்டத்தில் 9 பங்குகளில் 49 மகளிர் சுயஉதவிக்குழுக்களை உருவாக்கி அவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி குழுக்களை வழிநடத்துவது பதிவேடுகள் பராமரிப்பது போன்ற பயிற்சிகளும் அளிக்கப்பட்டு சேமிப்பு மற்றும் கடன் உதவி பெறும் வழிமுறைகளையும் உருவாக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் பெற்று வாழ்வாதாரத்திற்கான சிறு தொழில் செய்து வருமானம் ஈட்டி வருகின்றனர். இதற்காக ஊக்குநர், பிரதிநிதிகளுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.

| வ.எ | பங்கு | குழுக்களின் எண்ணிக்கை | வங்கி / கிளை | தொகை |
|---|---|---|---|---|
| 1 | சின்னமலை | 14 | Indian Bank | - |
| 2 | தி.நகர் | 3 | ICICI Bank | 5,00,000 |
| 3 | அபிராமபுரம் | 8 | Indian Bank | - |
| 4 | போரூர் | 6 | ICICI Bank | |
| 5 | சின்மயா நகர் | 7 | ICICI Bank | 35,00,000 |
| 6 | பெரம்பூர் | 5 | Indian Bank | 7,00,000 |
| 7 | பெரவள்ளூர் | 1 | Indian Bank | |
| 8 | திருவொற்றியூர் | 3 | Indian Bank | 12,00,000 |
| 9 | இராஜா அண்ணாமலைபுரம் | 2 | ICICI Bank | 6,00,000 |
| | | **49** | | **65,00,000** |

## 15 பீமன் தோப்பு - இயற்கை வேளாண்மை மாதிரி பண்ணை

சென்னை சமூக சேவை சங்கத்தின் இயற்கை வேளாண்மை மாதிரி பண்ணை அமைப்பதற்கு 13 1/4 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. இந்நிலத்தை சுற்றிலும் மதில் சுவர் புதியதாக எழுப்பபட்டுள்ளது. இந்த நிலத்தில் மா, கொய்யா, தேக்கு, தென்னை, வேம்பு, நெல்லி, செடிகள் வளர்க்கப்பட்டு வருகின்றது. இந்நிலத்தில் இயற்கை பயிர் செய்வதற்கும் மரம் வளர்ப்பதற்கும் அரசு தோட்டக்கலைத்துறை, வனத்துறை இவர்களோடு இணைந்து பராமரித்து வருகின்றோம்.





இந்த ஆண்டு 1600 நவீன ரக தன்மை கொண்ட தென்னங்கன்றுகள் நடப்பட்டது. இத் தென்னங்கன்றுகள் மூன்று கட்டங்களாக நடப்பட்டு தற்பொழுது வளர்ந்து வருகின்றது. தென்னங்கன்றிற்கும் மா செடிகளுக்கும் இயற்கை உரங்கள் இடப்பட்டு மருந்து தெளிப்பான்கள் மூலம் தெளிக்கப்பட்டு பசுமையுடன் பராமரிக்கப்பட்டு வருகின்றது. மேலும் விவசாயத்திற்கு அவசியமாக டிராக்டர் வாங்கப்பட்டு அதனை பயன்படுத்தி உழுவதற்கும் இதர பயன்பாட்டிற்கும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் வருகின்ற வருவாய் சென்னை சமூக சேவை சங்கத்திற்கு நல திட்டங்கள் அளித்திட உதவும்.

## 16 குழந்தைகள் காப்பகம்

மூன்று இடங்களில் குழந்தைகள் காப்பகங்கள் நடத்தப்படுகின்றன. குழந்தைகள் காப்பகங்களில் கல்வி மேம்படுத்த கலந்தாய்வு நடத்தப்பட்டது, இதில் ஆசிரியர்கள் பங்கேற்றனர். இத்திட்டமானது இந்திய சமூக நல திட்டத்தின் கீழ் ராஜீவ்காந்தி குழந்தைகள் காப்பகமாக இயங்கி வருகிறது.

| வ.எண் | மையம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | திருமுலைல்லைவாயல் | 31 |
| 2. | சாஸ்திரி நகர் | 25 |
| 3. | பழவேற்காடு | 30 |
| | மொத்தம் | 86 |



## 17 ஈரின் திட்டம்

(அயல்நாட்டில் இருந்து தாயகம்திரும்பியவர்கள்)

திருமதி சாமுண்டீஸ்வரி சிறு தொழில் செய்வதற்காக விண்ணப்பித்திருந்தார்கள் இவர்களுக்கு காரிதாஸ் இந்தியா நிறுவனம் ரூ.2,40,000/- உதவி செய்ய முன் வந்தது. கரைக்கால் பகுதியில் கறவைமாடு வளர்ப்பு (பண்ணை) செயல்படுத்துவதற்கு சென்னை சமூக சேவை சங்கம் உறுதுணையாக இருந்து வருகிறது.



## 18 டச்சு அகாடெமி

டச்சு அகாடமி மழலையர் மற்றும் துவக்கப்பள்ளி தமிழக அரசு நெறிமுறைகளின்படி 15.06.2022 பள்ளி திறக்கப்பட்டன.





தினசரி 132 மாணவ மாணவிகள் வருகை புரிந்தனர். ஆண்டு தேர்வு தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலின் படி மாணவர்களுக்கு ஆண்டு தேர்வு நடத்தப்பட்டது. இத்தேர்வில் 131 மாணவ, மாணவியர்கள் தேர்ச்சி பெற்றனர். பள்ளியின் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. குடியரசு தின விழா, ஆசிரியர் தினம், குழந்தைகள் தினவிழா, சுதந்திர தின விழாவும் கொண்டாடப்பட்டது. ஆசிரியர் கூட்டம், பெற்றோர் கூட்டம், மண்டல அளவில் நடைபெற்ற கல்வி திறன் வளர்ப்பு போட்டிகளில் நம் பள்ளி மாணவ செல்வங்கள் கலந்து கொண்டு 5 போட்டிகளில் முதலிடம் பெற்றார்கள்.

## 19 திறன் வளர்ப்பு பயிற்சி (வங்கிகளின் ஊக்கத்தொகை)

**NABFINS, ICICIBank, LIC** இந்த நிறுவனங்களின் வழியாக மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு கடன் உதவி திட்டங்கள் மற்றும் காப்பீடு போன்ற செயல்பாடுகள் சென்னை சமூக சேவை சங்க பணியாளர்கள் வழியாக மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு செயல்படுத்தப்படுகின்றது. இதில் கிடைக்கும் நிதியை களப்பணியாளர்களுக்கு ஊதியமாக வழங்கப்படுகிறது. **NABFINSU:**/8,71,031/-, **ICICI Bank** ரூ.4,21,580/-,**LIC** நிறுவனம் ரூ.1,54,953/-மொத்தம் ரூ.14,47,564/-.

| வ.எண் | வங்கிகளின் குத்தகை | தொகை |
|---|---|---|
| 1. | NABFINS | 871031 |
| 2. | ICICI BANK | 421580 |
| 3. | LIC | 154953 |
| | மொத்தம் | 1447564 |

## 20 வலுவான கூட்டமைப்பு

சென்னை சமூக சேவை சங்கத்தின் வழியாக செயல்படுகின்ற 2760 மகளிர் சுயஉதவிக்குழுக்களில் உள்ள 41921 உறுப்பினர்களும் வருடத்திற்கு ஒருமுறை சந்தா செலுத்தி உறுப்பினர்களாக தங்களை புதுப்பித்து கொள்கின்றனர். இப்புதுப்பித்தல் மூலம் அதிகாரபூர்வ உறுப்பினர்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்கின்றனர். இதன் மூலம் இந்த ஆண்டு 2022 அவர்கள் செலுத்திய சந்தா தொகை ரூ.2,07,950/- ஆகும்.

## 21 சமூகபணி கள ஆய்வு

ஒவ்வொரு வருடமும் பல கல்லூரிகளில் இருந்து மாணவர்கள் நம் நிறுவனத்தில் 6 மாதம் மற்றும் 1 மாத பயிற்சிக்காக வருகின்றனர். இந்த ஆண்டு லயோலா கல்லூரியில் இருந்து**MSW** 4 மாணவர்கள் மற்றும் ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் இருந்து **MSW** 3 மாணவிகள் மற்றும் **BSW** 2 மாணவிகள் கள ஆய்வுக்காக, சென்னை சமூக சேவை சங்க பணியிடங்களில், சென்று மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களோடு இணைந்து குழு கூட்டம் நடத்துவது மற்றும் பொது சேவைகள் இவைகளை பார்வையிட்டனர். மேலும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு கலை நிகழ்ச்சிகளையும் நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கு நோட்டு புத்தகம் எழுது பொருள் இவைகளை கொடுத்து உதவினார்கள்.





தனிநபர்களாக வந்தவர்கள் விவரம்

| வ.எண் | கல்லூரி | மாணாக்கர்களின் பெயர் | படிப்பு |
|---|---|---|---|
| 1 | லயோலா கல்லூரி | ஷெர்லி பெட்ரிசியா | MSW |
| 2 | லயோலா கல்லூரி | லாரன்ஸ் | MSW |
| 3 | லயோலா கல்லூரி | கோகுல் | MSW |
| 4 | லயோலா கல்லூரி | பெர்னார்ட் | MSW |
| 5 | ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி | மரிய ஸ்டாலின் | MSW |
| 6 | ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி | அலினா | MSW |
| 7 | ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி | பிரின்ஸி | MSW |
| 8 | ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி | பால ஹரிணி | MSW |
| 9 | ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி | ஆரபி | MSW |

## 22 சமூகம் சார்ந்த வளர்ச்சி நிதி

கல்வி, மருத்துவம், இறப்பு, குடிநீர், உடை, உணவு போன்ற காரணங்களுக்காக ஏழை, எளிய மற்றும் பின்தங்கிய குடும்பங்களுக்கு இந்நிதி உதவி வழங்கப்பட்டது.

| வ.எ | பெயர் | இடம் | காரணம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | விஜயகுமார் | | கல்வி உதவி | 1000 |
| 2 | ஜோஸ்பின் | திருவள்ளூர் | கல்வி உதவி | 2000 |
| 3 | பெர்னார்ட் ஆரோக்கியராஜ் | | கல்வி உதவி | 2000 |
| 4 | ராஜன் | | கல்வி உதவி | 500 |
| 5 | வீதி விழா கலைக்குழுவினர் | லயோலா கல்லூரி | கலை நிகழ்ச்சி உதவி | 5000 |
| 6 | அபர்ணா | புழல் | விளையாட்டு உதவி | 5000 |
| 7 | சிறை கைதிகள் | புழல் | பள்ளி சிறுவர்கள் உதவி | 33432 |
| 8 | பிரான்சிஸ் சேவியர் பள்ளி | ஆழ்வார்பேட்டை | ஏழை மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது | 3300 |
| 9 | பங்குதளங்களில் உள்ள ஏழை குடும்பங்கள் | சென்னை &திருவள்ளூர் | தேவையின் அடிப்படையில் | 430916 |
| 10 | லூர்தம்மாள், கிறிஸ்டோபர், ஷீபா | சென்னை | குடும்ப உதவி | 5000 |
| 11 | லூர்துசாமி | ரெட்ஹில்ஸ் | மருத்துவ உதவி | 3000 |
| 12 | மோசஸ் | கரையான்சாவடி | மருத்துவ உதவி | 2000 |
| 13 | ஓய்வு பெற்ற குருக்கள் | வியான்னி இல்லம், சாந்தோம் | உதவி வழங்கப்பட்டது | 7000 |
| | மொத்தம் | | | **500148** |



## 23 புனித லூயிஸ் கல்வி உதவி

| வ.எ | பெயர் | பாடப்பிரிவு | தொகை | வ.எ | பெயர் | பாடப்பிரிவு | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஹெலன் ப்ளோரா | II BA English | 12,000 | 14 | பெல்சியா | BCA | 12,000 |
| 2 | மகேஸ்வரி | BSC CS | 12,000 | 15 | ரித்திகா | Journalism | 12,000 |
| 3 | ஷெர்லி | BSC CS | 12,000 | 16 | ஜோவித் பெரியநாயக ராஜ் | B.Com (General) | 12,000 |
| 4 | மணிமாறன் | Corporate Secretary | 12,000 | 17 | மஞ்சினேஸ்வரன் | B.Com (A&R) | 12,000 |
| 5 | சக்தி இலக்கியா | Corporate Secretary | 12,000 | 18 | சுரேக் ஜோ | B.Com (A&R) | 12,000 |
| 6 | ரூபன் | Corporate Secretary | 12,000 | 19 | மரியபிரவீன்குமார் | Mathematics | 12,000 |
| 7 | சண்முக வேலு | Corporate Secretary | 12,000 | 20 | ஜஸ்வின் | BSc (Vis.com) | 12,000 |
| 8 | தனுசியா | BCA | 12,000 | 21 | மெர்பி செபாஸ்டின் | BSc (Vis.com) | 12,000 |
| 9 | இன்பெண்டா கரோலினா | Psychology | 12,000 | | | | |
| 10 | ஜீட் சாவியோ | Commerce | 12,000 | | | | |
| 11 | ஸ்மைலின் ரோசி | Vis.com | 12,000 | | | | |
| 12 | பிரவீன் குமார் | BCA | 12,000 | | | | |
| 13 | ஜோதிகா | BCA | 12,000 | | | மொத்தம் | 2,52,000 |

## 23 இருளர் இன குழந்தைகளுக்கு உதவி வழங்குதல்

வசதி உள்ள குடும்ப உறுப்பினர்கள் ஒன்று கூடி விழா கொண்டாடி மகிழ்வது வழக்கம். ஆனால் ஊருக்கு ஒதுக்குபுறமாகவும், காடுகளை சார்ந்து வாழும் இருளர் சமூக மக்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். இதனை கருத்தில் கொண்டு இவர்களுக்கு தீபாவளி திருநாளன்று வசந்தம் நகர், பூண்டி ஒன்றியம் சீனிகுப்பம் ஊத்துக்கோட்டை பகுதியில், நந்தியம் பாக்கம் மீஞ்சூர், மற்றும் புழல் ஒன்றியம் இந்த பகுதிகளில் உள்ள இருளர் சமூக குழந்தைகளுக்கு புத்தாடை மற்றும் இனிப்புகளை சென்னை சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் அருட்தந்தை ஆஎ ஜேக்கப் அவர்கள் வழங்கினார்கள்.

| வ.எண் | இடம் | தேதி | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | Dr அம்பேத்கர் நகர், திருப்பாச்சூர் | 19.10.2022 | 17 | 20 | 37 |
| 2 | செல்லியம்மன் நகர், ஊத்துக்கோட்டை | 19.10.2022 | 13 | 19 | 32 |
| 3 | சீனிக்குப்பம், ஊத்துக்கோட்டை | 19.10.2022 | 13 | 17 | 30 |
| 4 | எல்லம்மன்பேட்டை, ஊத்துக்கோட்டை | 19.10.2022 | 16 | 12 | 28 |
| 5 | சடையன் குப்பம், புழல் | 19.10.2022 | 12 | 18 | 30 |
| 6 | நந்தியம்பாக்கம், மீஞ்சூர் | 19.10.2022 | 42 | 30 | 72 |
| | **மொத்தம்** | | **113** | **116** | **229** |



## 25 ஏழைகளுக்கு உதவுதல்

சென்னை சமூக சேவை சங்கம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் ஏழை எளியவர்களுக்கு உடை கொடுத்து வருகின்றது. இந்த ஆண்டு டிசம்பர் மாதம் 2022-ல் 83 பங்குகளுக்கு கொடுக்கப்பட்டது.

| வ.எண் | பகுதி | லுங்கி | போர்வை | புடவை |
|---|---|---|---|---|
| 1 | அல்போன்சாபுரம் | 10 | 20 | 20 |
| 2 | பான்ரவேடு | 10 | 20 | 20 |
| 3 | திருவாலங்காடு | 30 | 15 | 05 |
| 4 | திருத்தணி | 0 | 0 | 50 |
| 5 | கனகமாச்சத்திரம் | 25 | 0 | 25 |
| 6 | தெக்களூர் | 0 | 0 | 50 |
| 7 | தொழுதாவூர் | 0 | 50 | 0 |
| 8 | ஆரம்பாக்கம் | 0 | 0 | 50 |
| 9 | காணியம்பாக்கம் | 0 | 20 | 50 |
| 10 | பெரியபாளையம் | 0 | 10 | 40 |
| 11 | பழவேற்காடு | 0 | 0 | 50 |
| 12 | ஊத்துக்கோட்டை | 0 | 20 | 30 |
| 13 | கும்மிடிபூண்டி | 0 | 0 | 50 |
| 14 | மீஞ்சூர் | 0 | 20 | 30 |
| 15 | பொன்னேரி | 0 | 15 | 30 |
| 16 | ரோசாநகரம் | 0 | 10 | 40 |
| 17 | காந்திபேட்டை | 10 | 10 | 30 |
| 18 | கல்லம்பேடு | 0 | 20 | 30 |
| 19 | மணவாளநகர் | 10 | 10 | 30 |
| 20 | பேரம்பாக்கம் | 0 | 0 | 50 |
| 21 | திருவள்ளூர் | 0 | 50 | 0 |
| 22 | கடம்பத்தூர் | 0 | 50 | 0 |
| 23 | கீழச்சேரி | 10 | 20 | 20 |
| 24 | பண்ணூர் | 0 | 0 | 50 |
| 25 | பிஞ்சிவாக்கம் | 10 | 10 | 30 |
| 26 | திருப்பாச்சூர் | 0 | 0 | 50 |
| 27 | காந்திநகர் | 25 | 0 | 25 |
| 28 | வளசரவாக்கம் | 0 | 50 | 0 |
| 29 | ஆவடி அண்ணாநகர் | 5 | 0 | 45 |
| 30 | ஜார்ஜ் டவுன் | 25 | 0 | 25 |
| 31 | பழைய மணலி | 15 | 20 | 15 |
| 32 | சத்தியமூர்த்தி நகர் | 0 | 0 | 50 |
| 33 | சிட்கோ நகர் | 0 | 0 | 75 |
| 34 | G.K.M காலனி | 15 | 10 | 25 |
| 35 | தென்றல் நகர் | 10 | 10 | 30 |
| 36 | சாஸ்திரிநகர் | 0 | 20 | 30 |
| 37 | கரிக்களவாக்கம் | 25 | 25 | 0 |
| 38 | புழல் | 0 | 0 | 30 |
| 39 | இலஷ்மிபுரம் | 10 | 30 | 10 |
| 40 | M A நகர் | 0 | 10 | 30 |

| வ.எண் | பகுதி | லுங்கி | போர்வை | புடவை |
|---|---|---|---|---|
| 41 | திருமுல்லைவாயல் | 0 | 10 | 40 |
| 42 | அசிசி நகர் | 0 | 10 | 40 |
| 43 | காமராஜர் நகர் | 25 | 25 | 0 |
| 44 | SC/ST கமிஷன் | 0 | 0 | 100 |
| 45 | மேய்ப்பு பணி மையம் | 0 | 0 | 75 |
| 46 | குரு மாணவர் மடம் | 10 | 10 | 30 |
| 47 | இலுப்பூர் | 15 | 15 | 0 |
| 48 | பட்ரந்தாங்கல் | 15 | 15 | 0 |
| 49 | நெடுமரம் | 20 | 20 | 0 |
| 50 | கிரைஸ்ட் காலேஜ் | 0 | 0 | 30 |
| 51 | வேப்பேரி (தூளை) | **0** | **50** | **0** |
| 52 | வேப்பேரி (தூசையப்பர்) | **15** | **0** | **35** |
| 53 | எம்,பி,டி, குவாட்ரஸ் (திருவெற்றியூர்) | **15** | **10** | **25** |
| 54 | இராயப்பேட்டை | **10** | **0** | **40** |
| 55 | கரையான்சாவடி | **0** | **25** | **25** |
| 56 | வியாசர்பாடி | **0** | **25** | **25** |
| 57 | இராயபுரம் (PS) | **15** | **10** | **25** |
| 58 | மதுரவாயல் | **0** | **20** | **30** |
| 59 | லிட்டில் மவுண்ட் | **0** | **20** | **30** |
| 60 | வேளச்சேரி | **10** | **20** | **20** |
| 61 | நெசப்பாக்கம் | **15** | **10** | **25** |
| 62 | தரமணி | **10** | **10** | **30** |
| 63 | எக்மோர் (தாமஸ்) | **0** | **0** | **50** |
| 64 | வில்லிவாக்கம் | **0** | **25** | **25** |
| 65 | ரெட்ஹில்ஸ் | **20** | **0** | **30** |
| 66 | அபிராமிபுரம் | **10** | **5** | **10** |
| 67 | ஆர் ஏ புரம் | **10** | **5** | **10** |
| 68 | தண்டையார்பேட்டை | **0** | **0** | **50** |
| 69 | கொருக்குபேட்டை | **10** | **0** | **40** |
| 70 | அந்தோணியார்புரம் | **10** | **15** | **25** |
| 71 | தூசைபுரம் | **10** | **15** | **25** |
| 72 | எர்ணாவூர் | **0** | **20** | **30** |
| 73 | பார்க்டவுன் | **10** | **10** | **30** |
| 74 | மணலி நியுடவுன் | **0** | **25** | **25** |
| 75 | பழஞ்சூர் | **0** | **0** | **30** |
| 76 | பாரதியார் நகர் | **0** | **0** | **30** |
| 77 | செவ்வாப்பேட்டை | **0** | **0** | **30** |
| 78 | எண்ணூர் | **0** | **0** | **30** |
| 79 | அருள் நகர் | **0** | **0** | **30** |
| 80 | செம்பியம் | **0** | **0** | **30** |

| வ.எண் | பகுதி | லுங்கி | போர்வை | புடவை |
|---|---|---|---|---|
| 81 | லஸ் | 0 | 0 | 30 |
| 82 | தேவி நகர் | 0 | 0 | 25 |
| 83 | எருக்கஞ்சேரி | 0 | 0 | 25 |
| | **மொத்தம்** | **500** | **970** | **3295** |

சென்னை சமூக சேவை சங்க மையத்தில் 21.12.2022 அன்று மையப்பணியாளர்கள் மற்றும் களப்பணியாளர்களோடு இணைந்து கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாடப்பட்டது.

## 26 குடும்ப பாதுகாப்பு திட்டம் - (SAFP)

சமூகத்தில் விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளவர்களுக்கு தனிநபர் வருவாய் பெருக்குவதற்காக பல்வேறு தொழில்களை தொடங்குவதற்கு 247 குடும்பங்களுக்கு ரூ.42,25,019/- நிதிஉதவியாக வழங்கப்பட்டது. இந்த ஆண்டு 2022 டிசம்பர் மாதம், 247 நபர்களுக்கு நிதி உதவி செய்கின்ற அனைத்து உபகாரிகளுக்கும் பயனாளிகள் நன்றி தெரிவிக்கும்விதமாக கிறிஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்களை கடிதத்தின் மூலம் தெரிவித்துக்கொண்டனர்.



குடும்ப பாதுகாப்பு திட்டத்தில் 8 ஒன்றியங்களில் உள்ள 82 குடும்பங்கள் கடந்த 6 ஆண்டுகளாக உதவி பெற்று வந்தனர். இந்த 6 ஆண்டுகளில் தங்கள் குடும்பங்களில் ஓரளவிற்கு தங்களின் பொருளாதார நிலையை உயர்த்தப்பட்டுள்ளனர் என்பதை உபகாரிகளுக்கு விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக நிதி உதவி செய்தவர்கள் 6 ஆண்டிற்கு பிறகு தங்கள் நிதி உதவியை நிறுத்திக்கொண்டனர்.

### சமூக பாதுகாப்பு திட்டம்

மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களின் பாதுகாப்பிற்கு ஒரு சிறு தொகையை ஒதுக்கி நுண்காப்பீடு திட்டத்தில் சேர்ந்துள்ளனர். 2022-ம் ஆண்டு 1098 உறுப்பினர்கள் இக்காப்பீடு திட்டத்தில் தங்களை புதுப்பித்துக் கொண்டனர்.

### நிறைவாக

சென்னை சமூக சேவை சங்கம் மேற்கண்ட திட்டங்களை சிறப்புற செய்ய உக்கப்படுத்தி வரும் எமது நிறுவானத்தின் தலைவர் பேரயர் டாக்டர் **ஜார்ஜ் அந்தோணிசாமி** ஆண்டகை அவர்களுக்கு எங்களது நன்றியை உரிதக்கிக் கொள்கின்றோம். மேலும் துணைத் தலைவர் பேரருட் தந்தை **ஸ்டான்லி செபாஸ்டின்** அவர்களுக்கும் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவர்களுக்கும் நன்றிகள். இச்செயல்பாடுகளை செவ்வனே செய்ய உதவி செய்த அனைத்து உபகரிகளுக்கும், மற்றும் மையப்பணியாளர்கள், களப்பணியாளர்கள் மாவட்ட கூட்டமைப்பு தலைவிகள், ஒன்றிய கூட்டமைப்பு பொறுப்பாளர்கள் அனைத்து வகையிலும் ஒத்துழைப்பு அளித்துவரும் இலக்கு மக்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.


ANNAI AUDIO








விவசாயிகள் தினம்








9940542355
SIP
SICK NEVER


சென்னை சமூக சேவை சங்கம்
பெண்கள் கூட்டமைப்பு




MSSS
MADRAS SOCIAL SERVICE SOCIETY








MADRAS SOCIAL SERVICE SOCITY
FUNDED BY






RAJIV GANDHI NATIONAL
CRECHE

